**கரூர் நகராட்சியில் 2018ம் வருடம் ஜீன் மாதம் 07ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**தனி அலுவலர்**
**கரூர் நகராட்சி**

**1)**தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு-D(2)ன்படி கரூர் நகராட்சியில் 30.10.2013ம் தேதிய நகர்மன்ற தீர்மான எண்.1835ல் 01.10.2013 முதல் கீழ்க்கண்ட விவரப்படி தொழில்வரி நிர்ணயம் செய்து அதன்படி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

| வ.எண் | அரை வருட வருமானம் | அரையாண்டு வரி விகிதம் |
|---|---|---|
| 1) | ரூ.21,000/– வரை | இல்லை |
| 2) | ரூ.21,001/– முதல் ரூ.30,000/– வரை | ரூ.118/– |
| 3) | ரூ.30,001/– முதல் ரூ.45,000/– வரை | ரூ.294/– |
| 4) | ரூ.45,001/– முதல் ரூ.60,000/– வரை | ரூ.587/– |
| 5) | ரூ.60,001/– முதல் ரூ.75,000/– வரை | ரூ.880/– |
| 6) | ரூ.75,001/– மற்றும் அதற்கு மேலும் | ரூ.1,173/– |

1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 124–D(13)ன்படி தொழில்வரி விகிதம் நகர்மன்றத்தால் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தி நிர்ணயம் செய்யப்பட வேண்டும். தொழில்வரி உயர்வானது அரையாண்டு வரியில் 25% விழுக்காட்டிற்கு குறையாமலும், 35% விழுக்காட்டிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும் என மேற்படி சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 124–D(13)ன்படி தொழில்வரியினை 01.10.2018 முதல் கீழ்க்குறிப்பிட்டுள்ள தொழில்வரியினை மறுநிர்ணயம் செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. மேலும் அதிகபட்சமாக தொழில்வரித் தொகை வருடத்திற்கு ரூ.2,500/–க்கு மிகாமல் இருக்கப்பட வேண்டும் எனவும் உள்ளது.

| வ.எண் | அரை வருட வருமானம் | 01.10.2013 முதல் வசூல் செய்யப்பட்டு வரும் மொத்த வரித் தொகை ரூ. |
|---|---|---|
| 1) | ரூ.21,000/– வரை | இல்லை |
| 2) | ரூ.21,001/– முதல் ரூ.30,000/– வரை | ரூ.118/– |
| 3) | ரூ.30,001/– முதல் ரூ.45,000/– வரை | ரூ.294/– |
| 4) | ரூ.45,001/– முதல் ரூ.60,000/– வரை | ரூ.587/– |
| 5) | ரூ.60,001/– முதல் ரூ.75,000/– வரை | ரூ.880/– |
| 6) | ரூ.75,001/– மற்றும் அதற்கு மேலும் | ரூ.1,173/– |

**அலுவலகக் குறிப்பு**

30.10.2013ம் தேதிய நகர்மன்ற தீர்மான எண்.1835யினை ரத்து செய்து 01.10.2018 முதல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு-Dன்படி தொழில்வரி அரையாண்டு வரியில் 25% விழுக்காட்டிற்கு குறையாமலும், 35% விழுக்காட்டிற்கு மிகாமலும் மன்றம் தொழில்வரியினை உயர்வு செய்யலாம். (அ8/4865/2018)

தீர்மான எண்.919 30சதவிகிதம் உயர்வு செய்திடவும், உயர்ந்தபட்ச தொழில்வரியாக ரூ.1250/– (அரையாண்டுக்கு) என தீர்மானிக்கப்பட்டது.

**2)**2013–2014ஆம் ஆண்டிற்கான தன்னிறைவு திட்டத்தில் கரூர் நகராட்சிக்குட்பட்ட பிரம்ம தீர்த்தம் சாலையில் பல்நோக்கு வளாகம் ரூ.350 லட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கரூர் மாவட்ட ஆட்சிதலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ7/1346/2014, நாள்.29.04.2015ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிக்கான மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம்,

சென்னை அவர்களின் ந.க.எண்.35683.2014/10/D1, நாள்.27.07.2015ல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 05.01.2016 அன்று திரு.எஸ்.சங்கர் ஆனந்த் என்ற ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது. இப்பணியில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் முகப்பு தோற்றம் அமைப்பதற்கும், லிப்ட் அமைப்பதற்கும் மொத்தத் தொகை ஒதுக்கீடு செய்து தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் மாவட்டம் அவர்களின் ஆய்வின் போது முகப்பு தோற்றம் அமைக்க வழங்கப்பட்ட அறிவுரையின்படி மதிப்பீட்டில் மொத்த தொகையாக அங்கீகரிக்கப்பட்ட பணிகளில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது என நகராட்சி உதவி பொறியாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் 11.05.2018 அன்று குறிப்பு வழங்கியுள்ளனர்.

1. கட்டிடத்தின் முகப்புத் தோற்றம் எழில்மிகு அழகான வடிவில் அமைத்தல்
2. சிறந்த கட்டிட ஆலோசகரிடமிருந்து வடிவமைப்பதற்கான வரைபடங்கள் பெறுவது மற்றும் அதற்குரிய கட்டணத் தொகை செலுத்துதல்.
3. கட்டிடத்தின் முன் முகப்பு பகுதியில் பொலிவுடன் அழகான ஆர்க்கிஸ்டெட்சர்ருல் அலங்கார பணிகளான வர்க்க பூச்சு with nayam thervai, Varga poochu without Nayam theervai அமைத்தல் மற்றும் அதற்கான சாரக்கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளுதல்.
4. கட்டிட முன்புறத்தில் அழகான வடிவில் கண்ணாடி தடுப்பு அமைத்தல்
5. தூண்கள் மற்றும் சிமெண்ட் பலகை (Slab) களில் ஸ்தபதி பணிகள் மேற்கொள்ளுதல்,
6. Texture Painting மற்றும் வெண்கல எழுத்துக்களினால் கட்டிடத்தில் பெயர் பதித்தல்
7. கட்டத்தில் லிப்ட் (Elevator) சப்ளை செய்து பொருத்தும் பணி

மேலும் மின்பணியில் பேனல் போர்டு மற்றும் LED light fittings அமைக்கும் பணிகள் Stainless steel bath room fitting.பொருத்துதல். பல்நோக்கு வணிக வளாக கட்டத்தினை முழுமையாக முடிக்கும்பொருட்டு ஒட்டு மொத்த தொகையாக குறிப்பிட்டுள்ள பணிகள் மற்றும் கூடுதல் பணிகளை தனித்தனியாக செந்தார விலை விகிதப் பட்டியல் மற்றும் உள்ளுர் மார்க்கெட் விலை விபரத்தின்படி மேற்கொள்ள தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களிடம் அனுமதியினை பெற்று பணியினை செய்து முடிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**:
ஒட்டு மொத்த தொகையாக குறிப்பிட்டுள்ள இனங்களுக்கான பணிகள் மற்றும் கூடுதல் பணிகளை செந்தார விலை விபர பட்டியல் விலைவிபரத்தின்படி அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகைக்குள்ளாகவே மேற்கொள்ள தலைமை பொறியர் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதியினை பெற்று பணியினை செய்து முடிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/5642/2015)

தீர்மான எண்.920 அனுமதிக்கப்பட்டது.

3)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 முதல் 32 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்காக தண்ணீர் வழங்க ஏதுவாக அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணறுகளில் உள்ள நீர்முழ்கி மின்மோட்டார் பழுதடைந்து இயக்க முடியாதநிலை ஏற்படுவதால் மேற்படி மோட்டார் மற்றும் பம்ப் மற்றும் இதர உபகரணங்கள் சப்ளை செய்து பழுதுபார்க்கும் பணிக்கு ரூ.11.00இலட்சம் மதிப்பீட்டில் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு பணியினை செய்து முடிக்க நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் பணியினை மேற்கொண்டு முடிக்கப்பட்டு செலவினம் ரூ.10,27,063/—யை குடிநீர் நிதியின் மூலம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|
| 1) | PRG Construction, Karur | 0.09% |
| 2) | KPD Contractors, Karur | 0.57% |
| 3) | Pipes and Cables, Karur | 1.51% |

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.10,27,063/—ஐ குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
3)மேற்படி பணியினை நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதிக்கப்பட்டு பணியினை மேற்கொண்டு முடித்தமைக்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ3/2181/2018)

தீர்மான எண்.921 பதிவு செய்யப்பட்டது.

4)இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39, 46 மற்றும் 47 ஆகிய பகுதிகளில் உள்ள தெருக்களில் மழைநீர் வடிகால் இல்லாமையால் வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் செல்ல வழியில்லாமல் வீடுகளுக்கு முன்பாக Soak pit அமைத்து கழிவுநீர் வெளியேறும் வகையில் உள்ளது. அப்பகுதி நிலம் பாறையாக உள்ளதால் கழிவுநீர் உறிஞ்ச வழியில்லாமல் சாலையோரங்களில் தேங்கி பொதுசுகாதாரக்கேடு ஏற்படும் வகையில் உள்ளது.

மேற்கூறப்பட்ட வார்டு பகுதிகளான அசோக் நகர், என்.ஜி.ஜி.ஓ., நகர், தென்றல் நகர், காமராஜர் நகர் ஆகிய இடங்களில் மாண்புமிகு மக்களவை துணை சபாநாயகர் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் ஆணையர் அவர்களால் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனு பெறுவதற்காக நடத்தப்பட்ட கூட்டத்தில் அப்பகுதி மக்களின் பிரதான கோரிக்கையாக அப்பகுதி முழுவதற்கும் வடிகால் அமைக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்கள்.

எனவே, அப்பகுதி முழுவதும் கழிவுநீர் வடிகால் அமைக்கத் தேவையான மதிப்பீட்டினைத் தயார் செய்யுமாறு உத்திரவிடப்பட்டதின் அடிப்படையில், அப்பகுதியினை முழுவதுமாக சர்வே செய்து லெவல் எடுத்து கழிவுநீர் வடிகால் அமைக்கப்பட வேண்டும். அசோக் நகர், தென்றல் நகர், காமராஜர் நகர், என்.ஜி.ஜி.ஓ., நகர் மற்றும் கருப்பகவுண்டன்புதூர் சாலை பகுதிகளில் சர்வே எடுத்து அதனடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கவும் அனுமதியும், தனியார் நிறுவனங்கள் மூலம் சர்வே எடுக்க அனுமதியும் அதற்கான செலவினம் ரூ.3000/— (per KM) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/4717/2018)

தீர்மான எண்.922 அனுமதிக்கப்பட்டது.

5) கரூர் நகராட்சி பகுதியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/தேபொ1 நாள்.19.10.2017, 06.12.2017 மற்றும் 13.12.2017ல் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி வரைவு மறுவரையறை கருத்துருக்கள், படிவங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியன தயார் செய்யப்பட்டு இந்நகர்மன்றத் தீர்மான எண்.529 நாள்.15.12.2017ல் நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலமாக மாநில தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பட்டு மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களால் சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து வரைவு வார்டு மறுசீரமைப்பு கருத்துருக்கள் மீது பொதுமக்களிடம் கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகள் பெற தினத்தந்தி செய்தி தாளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான விளம்பரக் கட்டணம் ரூ.10,080/— நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதி வழங்கலாம்.
2)மேற்படி செய்தியானது விளம்பரமாக தினத்தந்தி செய்தி தாளில் வெளியிடப்பட்டதற்கு விளம்பர கட்டணமாக ரூ.10,080/—ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்திட மன்றம் அனுமதிக்கலாம். (எப்2/10270/2017)

தீர்மான எண்.923 அனுமதிக்கப்பட்டது.

**6)**கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அருள்மிகு ஸ்ரீமாரியம்மன் பண்டிகை திருவிழா **28.05.2018** முதல் **30.05.2018** வரை நடைபெற உள்ளதால் மேற்காணும் திருவிழாவில் கலந்து கொள்ளும் பொதுமக்களின் வசதிக்கான அமராவதி ஆற்றங்கரை பகுதி ஜே.சி.பி., இயந்திரம் மூலம் மண்மேடுகளை சமன்செய்தல், தற்காலிக கழிப்பறை அமைத்தல், தற்காலிக பெண்கள் உடை மாற்றும் அறை அமைத்தல், கோயில் மற்றும் ஆற்றங்கரை பகுதிகளில் மரத்திலான தடுப்புகள் அமைத்தல், குடிநீர் வசதி, மின்விளக்குகள் வசதிகள் ஏற்படுத்த ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.**4.90**லட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள **18.05.2018**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.4.90 லட்சம்</u>**

1. திரு. கே.ராமசாமி ஒப்பந்ததாரர் கரூர் மதிப்பீட்டை விட 2.17 % சதம் குறைவு
2. திரு. ஜி.கதிர்வேல், கரூர் மதிப்பீட்டை விட 6.02 % சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.ராமசாமி ஒப்பந்ததாரர் கரூர் அவர்களின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களிடம் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். **(இ1/4221/2018)**

தீர்மான எண்.924 ஏற்கப்பட்டது.

**7)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**15** முதல் **32** வரையுள்ள பகுதிகளுக்கு **12** எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலமாக பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட பகுதிகளில் நகராட்சி பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் அவர்கள் நேராய்வு செய்த போது மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் உள்ள சுலீஸ் வால்வுகள் பழுதடைந்து இயக்க முடியாதநிலையில் உள்ளதால், குடிநீர் கட்டுக்குள் இல்லாமல் நிறைய குடிநீர் வீணாக வெளியேறி வருகிறது. எனவே, குடிநீர் வீணாகாமல் குடிநீர் விநியோகத்தை சீரான முறையில் விநியோகிக்க பழுதடைந்துள்ள சுலீஸ் வால்வுகளை மாற்ற வேண்டுமென குறிப்பு வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்கண்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள சுலீஸ் வால்வுகளை அகற்றிவிட்டு புதிதாக சுலீஸ் வால்வுகள் மாற்றும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**10,50,000/-**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**
**1)**மன்றம் அனுமதிக்கலாம்.
**2)**மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
**3)**மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். **(இ2/5237/2018)**

தீர்மான எண்.925 அனுமதிக்கப்பட்டது.

**8)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**23** கச்சேரி பிள்ளையார் கோயில் அருகில் உள்ள மணிகூண்டு சுவர்கள் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளதால் கோபுர கடிகாரங்கள் பொருத்தப்பட்டு பழுதுபணிகள் மேற்கொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**3.00**லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**
**1)**மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2018)

தீர்மான எண்.926 அனுமதிக்கப்பட்டது.

9)கரூர் நகராட்சி வார்டு எண்.32 ஏ.வி.பி., மஹால் அருகில் உள்ள சாலை மண் சாலையாக உள்ளதால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. மேற்காணும் சாலையை தார் சாலையாக அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6.25லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2018)

தீர்மான எண்.927 அனுமதிக்கப்பட்டது.

10) கரூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு துப்புரவு பணிகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ள தேவையான தளவாட சாமான்கள் கடந்த 2016ம் ஆண்டு வாங்கப்பட்டு பயன்படுத்தி வந்த நிலையில் தற்போது அனைத்து தளவாட சாமான்களும் உடைந்தும் தேய்ந்தும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் தற்போது கீழ்க்காணும் விபரப்படி தளவாட சாமான்கள் உத்தேச செலவினம் ரூ.6.50 லட்சம் மதிப்பீட்டில் வாங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண். | விபரம் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | மூங்கில் கூடை | 150Nos x 345 | 51750 |
| 2 | தட்டி மார்(தென்னைமார்) | 300Nos x 284 | 85200 |
| 3 | சாக்கடை கரண்டி | 150Nos x 325 | 48750 |
| 4 | 4பல் கொக்கி பிடியுடன் | 50Nos x 885 | 44250 |
| 5 | 2பல் கொக்கி பிடியுடன் | 150Nos x 730 | 109500 |
| 6 | கூட்டு மாறு தென்னை | 1000Nos x 38 | 38000 |
| 7 | மண்வெட்டி பிடியுடன் | 150Nos x 385 | 57750 |
| 8 | பிளாஸ்டிக் சட்டி | 200Nos x 335 | 67000 |
| 9 | பிளாஸ்டிக் கூடை | 100Nos x 640 | 64000 |
| 10 | அரிவாள் பிடியுடன் | 50Nos x 620 | 31000 |
| 11 | மண் சுரண்டி | 100Nos x 135 | 13500 |
| 12 | மண் தள்ளும் பிரஸ் | 100Nos x 284 | 28400 |
| 13 | கடப்பாறை | 10Nos x 840 | 8400 |
| | | **மொத்தம்** | **647500** |

<u>அலுவலகக் குறிப்பு</u>
1)மன்றம்அனுமதிக்கலாம்.
2)ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று நகராட்சி பொது நிதியிலிருந்து வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3)பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் சுகாதார பணியாளர்களின் நலன் கருதியும் ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம். (2120/2018/எச்1)

தீர்மான எண்.928 அனுமதிக்கப்பட்டது.

11)இந்நகராட்சி புதிய நகராட்சி அலுவலக கட்டிட பணிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி மக்கள் குரல் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையில் விளம்பரம் செய்தமைக்கு Accord Advertising Agencies நிறுவனத்திற்கு விளம்பரக் கட்டணம் ரூ.1,53,563/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி விளம்பரம் கட்டணம் ரூ.1,53,563/– நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம். (இ1/5060/2018)

தீர்மான எண்.929 அனுமதிக்கப்பட்டது.

12)கரூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் கோவில் வைகாசி மாத திருவிழாவினை முன்னிட்டு 23.05.2018 முதல் 30.05.2018 முடிய கரூர் ஜவஹர் பஜார் சாலையில் தலைமை தபால் நிலையம் முதல் கருப்பாயி கோயில் இறக்கம் வரை தரைக்கடைகளுக்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமத்திற்கு (அமராவதி ஆற்றுப்படுகை மற்றும் அமராவதி ஆற்றுக்குள் ராட்சத ராட்டினம் போன்ற எந்தவிதமான சாதனங்களுக்கும் அனுமதியில்லை என்ற நிபந்தனையுடன்) பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் 18.05.2018ம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மேற்படி பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் பெறப்பட்ட கேள்வித் தொகைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|
| 1) | திரு.வி.கருணாநிதி<br>த/பெ வைரப்பெருமாள்<br>6, இராமகிருஷ்ணபுரம், கரூர் | ரூ.1,58,000/– |
| 2) | திரு.எம்.லாரன்ஸ்<br>த/பெ மதலைமுத்து<br>46/42, பசுபதி லே அவுட், கரூர் | ரூ.1,60,000/– |

**அலுவலகக் குறிப்பு**
1)18.05.2018ம் தேதி நடைபெற்ற பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கரூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் கோவில் வைகாசி மாத திருவிழாவினை முன்னிட்டு 23.05.2018 முதல் 30.05.2018 முடிய கரூர் ஜவஹர் பஜார் சாலையில் தலைமை தபால் நிலையம் முதல் கருப்பாயி கோயில் இறக்கம் வரை தரைக்கடைகளுக்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை ரூ.1,60,000/– வரிசை எண்.2ல் கண்டுள்ள திரு.எம்.லாரன்ஸ் கோரியுள்ளார். அன்னாரின் உயர்ந்தபட்ச கேள்வித் தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.
2)தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
(அ6/5710/2015)

தீர்மான எண்.930 அனுமதிக்கப்பட்டது.

13)கரூர் நகராட்சி வார்டு எண்.6 ஜாமியா நகர் பகுதி பொதுமக்களுக்கு போதிய குடிநீர் வசதி இல்லாத காரணத்தால் மேற்படி இடத்திற்கு பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று பொதுமக்களின் குடியிருப்பு பகுதிக்கு பைப் லைன் விஸ்தரிப்பு பணிகளுக்கு **ரூ.0.75இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | Sree Builders, Manapparai | 0.47% குறைவு |
| 2) | G.Nanthakumar, Karur | 1.68% அதிகம் |
| 3) | Sri.Krishna Traders, Karur | 2.25% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**
மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Sree Builders, Manapparai அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.0.75 லட்சத்தினை நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ1/2018)

தீர்மான எண்.931    பதிவு செய்யப்பட்டது.

14)கரூர் நகராட்சி வார்டு எண்.39ல் சொத்துவரி விதிப்பு எண்.082/039/02264 குடிநீர் இணைப்பு எண்.082/039/02264 திரு.ஜி.தர்மலிங்கம் பெயரிலிருந்து கே.நல்லுசாமி, பி.பெரியசாமி பெயருக்கு மாற்றம் செய்ய சட்டக்கருத்துரு பெற்றமைக்கு அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.2,500/– வழங்க கோரியுள்ளார்.

நகர்மன்ற வழக்கறிஞர் திரு.பி.நகுல்சாமி அவர்களுக்கு ரூ.2,500/– (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
வழக்கறிஞர் கட்டணம் ரூ.2,500/– (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) திரு.பி.நகுல்சாமி வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.    (அ5/477/2017)

தீர்மான எண்.932    அனுமதிக்கப்பட்டது.

(ஒ/ம்) ப.அசோக்குமார்
தனி அலுவலர்
கரூர் நகராட்சி

//உண்மை நகல்//

ஆணையர்
கரூர் நகராட்சி

**கரூர் நகராட்சியில் 2018ம் வருடம் ஜீன் மாதம் 27ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.**

**தனி அலுவலர்**
**கரூர் நகராட்சி**

**1)**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண்.**97**, நாள்.**04.09.2017**ல் அரசு கரூர் நகராட்சிக்கு சொந்தமான சணப்பிரட்டி கிராமம் சர்வே எண்.**1481, 1482, 1483** முதல் **1484**ல் மொத்தம் **30.27** ஏக்கரில் பூங்கா இடம் **10.04** ஏக்கர் மற்றும் **2.78** ஏக்கர் பாதை நீங்கலாக மீதமுள்ள **17.45** ஏக்கர் நிலம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசாணை (நிலை) எண்.**35**, நாள்.**17.02.1997** பத்தி எண்.**3**(அ)—ன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான பட்டா நிலமாக இருக்குமேயானால் (Private lands belonging to Municipal Councils and Municipal Corporation Council) அது எந்த அரசு மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனத்திற்கு தேவையானாலும், அதனை அப்போதைய சந்தை மதிப்பு (Market value at the rate) அடிப்படையில்தான் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் முன்நுழைவு அனுமதி வழங்கி ஆணை பிறப்பித்ததன் அடிப்படையில் **19.09.2017**ல் கரூர் மருத்துவக்கல்லூரி நிர்வாகத்திற்கு மேற்குறிப்பிட்ட நிலம் **17.45** ஏக்கர் ஒப்படை செய்யப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.20895/2014, தீர்ப்பு நாள்.**20.06.2018**—ல் திரு.ராம்மோகன், **10.4** ஏக்கர் பூங்கா நிலம் தொடர்பான பூங்கா கட்டுமான ஒப்பந்ததாரர் வழக்கு தொடர்ந்து நிலுவையிலிருந்து வந்த வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்விடம் சம்மந்தமாக ஏற்கனவே தொடரப்பட்ட வழக்குகள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டு தற்போது எந்த வழக்கும் நிலுவையில் இல்லை.

இந்நிலையில் தலைவர் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி கரூர் அவர்களின் கடித ந.க.எண்.977/P&D/Karur/2018 நாள்.**22.06.2018**—ல் இந்திய மருத்துவ கழக வழிகாட்டு மற்றும் பிற்கால விரிவாக்க தேவைக்காக ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட **17.45** ஏக்கர் நிலம் போக மீதமுள்ள பூங்கா ஒதுக்கீடு இடம் **10.04** ஏக்கர் நிலத்தினை மருத்துவ கல்லூரி இடத்திற்கு தொடர்ச்சியாக வழங்குமாறு கோரியுள்ளார். மேலும் இவ்வலுவலக கடித ந.க.எண்.எப்**1/2433/2016**, நாள்.**27.06.2018**—ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கரூர் அரசு மருத்துவ கல்லூரி அமைத்திட தலைவர் மருத்துவ கல்லூரி அவர்களின் கோரிக்கையின்மீது தக்க உத்திரவுகோரி பிரேரணனை அனுப்பி வைக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**6442/2016**/டிபி**4**, நாள்.**27.06.2018**ல் அரசு முதன்மை செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, நேர்முக கடிதம் எண்.**17428/E2/2018**, நாள்.**26.06.2018**ஐ கோடிட்டு கரூர் அரசு மருத்துவ கல்லூரி கட்ட மீதமுள்ள பூங்கா ஒதுக்கீடு இடம் **10.04** ஏக்கரையும் சேர்த்து மொத்தம் **27.49** ஏக்கர் நிலத்தினை வழங்குவது தொடர்பாக நகராட்சியின் பிற்கால பொதுப்பயன்பாட்டு நில தேவைகள் இந்நிலத்தின் மதிப்பு மற்றும் அரசாணை (நிலை) எண்.**730**, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சிதுறை நாள்.**14.04.1976** ஆகியவற்றை கருத்தில் கொண்டு நகராட்சிக்கு நிலம், அதில் உருவாக்கப்பட்டுள்ள நகராட்சி சொத்துக்கள் மற்றும் நிதி இழப்பு ஏதுமின்றி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசாணை (நிலை) எண். **35**, நாள்.**17.02.1997** பத்தி எண்.**3**(அ)—ன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான பட்டா நிலமாக இருக்குமேயானால் (Private lands belonging to Municipal Councils and Municipal Corporation Council) அது எந்த அரசு மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனத்திற்குத் தேவையானாலும், அதனை அப்போதைய சந்தை மதிப்பு (Market value at the rate)

அடிப்படையில்தான் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலும் மற்றும் இவ்விடத்தில் ஏற்கனவே பூங்கா மேம்பாட்டிற்காக நகராட்சியால் இதுநாள்வரை செலவிடப்பட்ட சொத்தாக்கம் செய்திட செலவிடப்பட்ட தொகை ரூ.90.00 இலட்சம் ஆகியவற்றை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் முன்நுழைவு அனுமதியினை நகராட்சி ஆணையாளர் கரூர் அவர்கள், முதல்வர் அரசு மருத்துவ கல்லூரி கரூர் அவர்களுக்கு அளித்திட ஆணையிட்டுள்ளது. மேலும் இந்நேர்வில் அரசின் பின்னேற்பினை பெற்று வழங்கிட இவ்வாணையரகம் மூலம் தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு கீழ்கண்ட விபரப்படி 10.04 ஏக்கர் இடத்தினை மருத்துவ கல்லூரி கட்ட முன்நுழைவு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ஒப்படை சொத்து விபரம்:–**

மாவட்டம் : கரூர்
தாலுக்கா : கரூர்
கிராமம் : சணப்பிரட்டி

| வ.எண். | புல எண். | விஸ்தீரணம் (ஏக்கரில்) | அரசாணை எண்.97, நாள்.14.09.2017ன்படி முன் நுழைவு அனுமதி வழங்கிய விஸ்தீரணம் (ஏக்கரில்) | தற்போது முன்நுழைவு வழங்கும் விஸ்தீரணம் (ஏக்கரில்) |
|---|---|---|---|---|
| 1 | 1481 | 14.90 | 12.57 | - |
| 2 | 1482 | 7.47 | 2.71 | 4.64 |
| 3 | 1483 | 3.84 | 0.15 | 3.55 ½ |
| 4 | 1484 | 4.06 | 2.02 | 1.84 ½ |
| | மொத்தம் | 30.27 | 17.45 | 10.04 |

**அலுவலகக் குறிப்பு :–**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.6422/2016/டிபி4, நாள்.27.06.2018ன்படி 10.04 ஏக்கர் இடத்தினை தலைவர் கரூர் மருத்துவ கல்லூரி அவர்களுக்கு ஒப்படைக்கவும், அதற்காக அரசின் பின்னேற்பு பெற கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம். (எப்1/2433/2016)

தீர்மான எண்.933 அனுமதிக்கப்பட்டது.

(ஒ/ம்) ப.அசோக்குமார்
தனி அலுவலர்
கரூர் நகராட்சி

//உண்மை நகல்//

ஆணையர்
கரூர் நகராட்சி